**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : CC.No.346/2018</u>**

**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | கல்லூரணி | வயது | : | 67 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Tuesday of 02.06.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் கல்லூரணியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க செல்வவிநாயகபுரத்தில் வைத்து போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.03 19:20:16 +0530